ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව
கமநல அபிவிருத்தித் திணைக்களம்
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல. / My No. | 7/13/AD/1 (V5) | ඔබේ අංකය / உமது இல. / Your No. | | දිනය / திகதி / Date | 01.01.2020 |

**சுற்றுநிருபம் - 01/2020**

மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்கள்,
கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள் மற்றும்
விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள்.

**<u>2016/2019 கமத்தொழில் காணி (வயல்) மீளத்திருத்த வேலைத்திட்டத்தின் கீழ் "B"வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, தரிசான வயற்காணிகளில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்டாதவாறு, 2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 2000 ஆம் ஆண்டு46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30 (3) மற்றும் 34 (1) பிரிவுகளின் கீழ் நெல் தவிர்ந்த அரையாண்டுப் பயிர்கள் அல்லது நிரந்தரப் பயிர்கள் அல்லாத பல வருடப் பயிர்களைப் பயிரிடல் அல்லது கமத்தொழில் பயிர்ச்செய்கை அல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு அல்லது கமத்தொழிலுக்கு ஏற்புடையதான வேறு நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு அனுமதியை வழங்குவதன் மூலம் கமத்தொழில் காணிகளில் உற்பத்தித்திறனை அதிகரித்தல்</u>**

மேற்படி விடயம் தொடர்பாக 27.08.2018 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 19/2018 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஏதேனுமொரு வயற்காணியொன்றை நெற்ச்செய்கைத் தவிர்ந்த வேறு கமத்தொழில் பயிர்ச்செய்கை அல்லது கமத்தொழில் பயிர்ச்செய்கை அல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கையின் பொருட்டு அல்லது கமத்தொழிலுக்கு ஏற்புடையதான வேறு நடவடிக்கையின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு இதுவரையிலும் அனுமதி பெற்றுக் கொண்டுள்ள நிழக்கிழார், சொந்தக் காணிப்பயிர்ச்செய்கையாளர்கள், மற்றும் இருப்பாட்சியாளர்களின் உரிமைகளுக்கு ஏற்படாதவாறு பாரபட்சம் ஏற்படாதவாறு, இந்நாட்டின் தரிசான வயற்காணிகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நோக்கத்துடன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுநிருப அறிவுரைகளைச் செயற்படுத்தும் படி இத்தால் அறிவுரைகளை வழங்குகின்றேன்.

02. இச்சுற்றுநிருப அறிவுரைகளைச் செயற்படுத்தும் போது வயற்காணிகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியசுற்றுச் சூழல் நன்மைகளுக்கு பாதிப்புக்கள் இல்லாதிருத்தல் வேண்டும் என்பதுடன், இதன் போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் விசேட அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும்.

ගොවිජන සංවර්ධන දෙපාර්තමේන්තුව, අංක 42, ශ්‍රීමත් මාර්කස් ප්‍රනාන්දු මාවත, තැ. පෙ. 537, කොළඹ 07.
கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல. 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, அ. பெ. 537, கொழும்பு 07.
DEPARTMENT OF AGRARIAN DEVELOPMENT, NO. 42, SIR MARCUS FERNANDO MAWATHA, P. O. BOX 537, COLOMBO 07.
දුරකථන/தொலைபேசிகள்/Telephones :
පොදු කාර්යාලය / பொது அலுவலகம் / General Office: 2694231, 2694232, 2694233, 2694234
ගොවිජන සංවර්ධන කොමසාරිස් ජනරාල් / கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் / Commissioner General of Agrarian Development: 2691060
ෆැක්ස් / தொலை நகல் / Fax: 2693572, 2691843, 2674481
E-mail : commissionerdad@yahoo.com
විදුලි පණිවුඩ / தந்தி / Telegram: ගොවිජනසේවා / கொவிசேவா / Agraservis

I. இச்சுற்றுநிருப அறிவுரைகளை, 2016/2019 கமத்தொழில் காணி (வயல்) இடாப்பு மீள்திருத்த வேலைத்திட்டத்தின் போது ‘B’ வகுதியின் கீழ் இதுவரையில் அடையாளம் கண்டுள்ள தரிசான வயற்காணிகள் தொடர்பாக மட்டும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும். தற்போதுள்ள நிலைப்பாட்டிற்கமைய,இக்காணிகளில் நெற்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாது என்பதுடன், அதற்குப் பதிலாக நிரந்தரமல்லாத, வேறு கமத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஆற்றல் உள்ளது. இருப்பினும், இக்காணிகளில் மீண்டும் நெற்செய்கையை மேற்கொள்ளும் பொருட்டு பொருத்தமான சூழ்நிலையை, எதிர்காலத்தில் உருவாக்கப்பட்டால், அக்காணிகளில் மீண்டும் நெற்ச்செய்கையை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுவதற்கு ஏற்றவாறு, குறித்த காணிகளை கமத்தொழில் காணி (வயல்) இடாப்பில் தொடர்ந்தும் பேணப்படுவதற்கும், இவ் இடாப்பின் “ குறிப்பு என்னும் நிரலில்” இச்சுற்றுநிருபத்தின் கீழ் குறித்த காணி தொடர்பில் வழங்கப்பட்டுள்ள அனுமதி பற்றிய தகவல்களைக் குறிப்பிடுவதற்கு உரிய கமநல சேவைகள் நிர்வாகக் குழுவின் நிறைவேற்றுச் செயலாளர் செயற்படல் வேண்டும்.

II. நெல் தவிர்ந்த வேறு பயிர்களை பயிரிடலாகாது என தற்போதைக்கும் ஏதேனும் அரச நிறுவனத்தினால் சிபாரிசு செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் அமைந்துள்ள தரிசான வயற்காணிகளின் பொருட்டு இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ளலாகாது. உதாரணமாக இலங்கை காணி அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்தால் (SLLDC), அந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுள்ள விசேட அதிகாரப்பிரதேசங்களைக் குறிப்பிடலாம். அவ்வாறான விசேட அதிகாரப் பிரதேசங்களினுள் தரிசான வயற்காணிகளில் நெல் தவிரந்த வேறு பயிர்களைப் பயிரிடும் பொருட்டு அனுமதியை வழங்கும் போது, குறித்த நிறுவனத்தின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

III. 2000 ஆண்டு46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் அல்லது நீர்ப்பாசனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக் கூட்டங்கள் நடைபெறும் வயற்காணிகளுக்குரிய தரிசு வயற்காணிகளில் தொடர்பாக இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகளைச் செயற்படுத்துவதற்கு முன்னர், இதன் பொருட்டு கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 86(1)பிரிவின் கீழ் நடைபெறும் “சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளரினதும் இருப்பாட்சியாளர்களினதும் சட்டபூர்வமான கூட்டம்” அல்லது 1994 ஆண்டு 13 ஆம் இலக்கமுடைய நீர்ப்பாசனத் (திருத்தச்) சட்டத்தின் 5(6) பிரிவின் கீழ் நடைபெறும் சட்பூர்வமான பயிர்ச்செய்கைக் கூட்டத்தின் போது, இதன் பொருட்டு முன்மொழிவுகள் நிரந்தரமாக ஆமோதித்து இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், இக்கூட்ட அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை உரிய கமநல சேவைகள் நிர்வாகக் குழுவின், இச்சுற்றுநிருப அறிவுரைகளைச் செயற்படுத்துவற்குரிய கடிதக்கோவையில் இடுதல் வேண்டும். அத்துடன், கமத்தொழில் காணி (வயல்) இடாப்பின், இச்சுற்றுநிருபத்தின் கீழ் அனுமதியை வழங்கும் வயற்காணிக்குரிய “தொடர்பு” மூலம் தொடர்புபடுத்தும் “குறிப்பு நிரலில்” மேற்குறிப்பிடப்பட்டுள்ள பயிர்ச்செய்கைக் கூட்டத்தின் அனுமதி தொடர்பான குறிப்பொன்றை வைத்தல் வேண்டும்.

IV. இச்சுற்றுநிருபம் வெளியிடப்பட்ட திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் மேற்படி அறிவுரைகளுக்குரிய "B" வகையிலான தரிசு வயற்காணிகள், நெற்ச் செய்கைத் தவிர்ந்த கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பாவனைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு, உரிய நிழக்கிழார், சொந்தக் காணிப்பயிர்ச்செய்கையாளர்கள், மற்றும் இருப்பாட்சியாளர்களுக்கு அனுமதி உரித்தாகின்றது.

(அ) அரை வருடப் பயிர்கள்

(ஆ) நிரந்தரமல்லாத பல வருடப்பயிர்கள்

(இ) பயிர்ச்செய்கை தவிர்ந்த வேறு கமத்தொழில் நடவடிக்கைகள்

<u>அரை வருடப்பயிர்களின் பொருட்டு உதாரணம்</u>

I. நாளாந்த பாவனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடிய மரக்கறி வகைகளைப் பயிரிடல்.

II. கங்குன், பொன்னாங்காணி, வல்லாரை, சாரணை,சோம்பு பசளி, போன்ற உணவிற்கு எடுத்துக் கொள்ளக் கூடிய கீரை வகைகள், பலவீனமான நீர் ஓட்டம் உள்ள தாழ்ந்த நிலங்களில் கொஹில, தாமரைக் கிழங்கு, நீரமுள்ளி போன்ற பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளல்.

III. பொருத்தமான வயற்காணிகளில் தற்போது அரிதாகக் காணக்கிடைக்கக் கூடிய இலங்கையில் மட்டுமே உள்ள கிழங்கு வகைகளான கொடிக்கிழங்கு, இராசவள்ளிக் கிழங்கு வள்ளிக்கிழங்கு, பால் கிழங்கு, மரவள்ளி போன்றவற்றை பயிரிடும் பொருட்டு முன்னுரிமை வழங்குதல்

IV. மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்களைப் பயிரிடல்.

V. கறவைப் பசுக்களின் பொருட்டுத் தேவையான புல் வகைகளைப் பயிரிடல்.

VI. சிறந்த நீரோட்டம் உள்ள காணிகளில் சோளம், மிளகாய், கச்சான் போன்ற மேலதிகப் பயிர்களைப் பயிரிடல்.

VII. ஒரு பயிருக்குப் பதிலாக குறுகிய கால கலவைப் பயிர்களை அல்லது இடைப்பயிர்களை (Mix Cropping or Inter Cropping) அறிமுகம் செய்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இதன் கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பயிர்களுக்கு மேலதிகமாக பிரதேசத்திற்குப் பொருத்தமான பயிர் வகைகளை, விவசாயப் போதனாசிரியரின் சிபாரிசின் பேரில் அறிமுகப்படுத்துவதற்கு கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் செயற்படல் வேண்டும்.

<u>நிரந்தரமல்லாத பல வருடப்பயிர்கள்</u>

இதன் போது பயிரின் ஆயுட்காலம் 05 வருடங்களை மிஞ்சாத நிரந்தரமல்லாத பயிர்களாக வாழை, பப்பாசி, அன்னாசி, ட்ரகன் ப்ரூட் மற்றும் வேறு பழ வகைகள் கருதப்படும். இதன் போது கறுவா, வாசனைப் பொருட்கள் போன்ற 05 வருடங்களை விடக் கூடிய பல வருடப்பயிர்களை பயிரிடுவதற்கு எதிர்பார்ப்பதாயின், அதன் பொருட்டு 19/2018 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் 6(4) பிரிவின் கீழ் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு நிழக்கிழார்களினால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**பயிர்ச்செய்கை தவிர்ந்த வேறு கமத்தொழில் நடவடிக்கைகள்**

பயிர்ச்செய்கை அல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கைகளாக தேனீர் வளர்ப்பு, நன்னீர் வளர்ப்புத்துறைகள், காளான், கன்றுகள் மற்றும் பழக்கன்று நாற்றுமேடைகள், கால்நடை வளர்ப்பு போன்றவையாகும். இருப்பினும், நிரந்தரமான நன்னீர் மீன் தடாகங்களை நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கும் சந்தர்ப்பங்களின் போது, 19/2018 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் அறிவுரைகளைப் பின்பற்றல் வேண்டும்.

அத்துடன், கமத்தொழில் நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்லும் பொருட்டு உதவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பொருட்டும் இதன் கீழ் அனுமதி உரித்தாகும்.

I. சிறிய அளவிலான பொய்கைகள், குழிகள், தடாகங்கள் கிடங்குகள் போன்ற மழை நீரைச் சேகரிக்கும் பொருட்டு போன்று வண்டல் மண், இரும்புத்துரு கொண்ட நீரை வடித்து வேறாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்கு பொருட்டு ஈடுபடுத்தல்.

II. நாற்று மேடைகளை நடாத்துதல், தற்காலிகப் பாதுகாப்புக் கூடங்கள், மலர் வளர்ப்பு ஆகியவற்றின் பொருட்டு தரிசான வயற்காணிகளை ஈடுபடுத்தல்.

III. இயற்கையான அல்லது செயற்கை நீர் வழிகள், நீர் ஊற்றுக்கள், நீர்ப்பாசன அமைப்புக்கள், விவசாய வீதிகள் போன்றவற்றின் பொருட்டு தேவையான ஒதுக்குகளை ஒதுக்குதல்.

03. மேற்படி சுற்றுநிருபத்தின் அனுமதியின் கீழ், எதிர்பாரக்கும் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்றவாறு நிலங்களைத் தயார் செய்தல் அல்லது பாத்திகளை அமைத்தல் மேற்கொள்ளலாம் எனினும், எக்காரணம் கொண்டும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதியில்லாது காணிக்கு, வெளியிலிருந்து எடுத்துவந்து மண் நிரப்புதல் அல்லது காணியிலிருந்து மண் அகற்றல் அல்லது உரிய காணியில் நிரந்தரக் கட்டடம் அல்லது வேறு நிரந்தர நிர்மாணங்களை மேற்கொள்ளலாகாது. இருப்பினும் முன்மொழியப்படும் கமத்தொழில் நடவடிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டுத் தேவையாயின், அதன் பொருட்டு உரிய தரிசான வயற்காணியில் " தற்காலிக கொட்டகையை" நிர்மாணிப்பதற்கு அனுமதி உண்டு.

04. இச்சுற்றுநிருப அறிவுரைகளுக்கு உரியதான "B" வகையிலான தரிசான வயற்காணிகளில் நெல் தவிர்ந்த அரை வருடப்பயிர்கள், நிரந்தரமல்லாத பல வருடப்பயிர்கள் போன்று பயிர்ச்செய்கையல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டான அனுமதிப்பத்திரத்தை இணைப்பு - 01 படிவத்திற்கமைய தயாரித்து, 15.02.2020 ஆந் திகதிக்கு முன்னர் உரிய காணியின் சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளரிடம் அல்லது இருப்பாட்சியாளர் உள்ள காணியெனில், அக்காணியின் சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளரிடமும் மற்றும் இருப்பாட்சியாளரிடமும் கையளிப்பதற்குச் சகல கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்களும் செயற்படல் வேண்டும்.

05. இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் "B" வகையிலான தரிசான வயற்காணிகள், கட்டிமாறு அல்லது தட்டுமாறு முறையில் பயிரிச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற்காணிகளின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுமாயின், அவற்றில் அரை வருடப்பயிர்களைப் பயிர்களை பயிரிடுவதற்கு மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன், நிரந்தமல்லாத பல வருடப் பயிர்கள் அல்லது

பயிர்ச்செய்கைகள் அல்லாத கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு இக்காணிகளை ஈடுபடுத்துவதாயின், உரிய காணியின் சகல சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர்கள் அல்லது இருப்பாட்சியாளர்கள் உள்ள சந்தர்ப்பத்தின் போது, சகல நிழக்கிழார்களின் மற்றும் இருப்பாட்சியாளர்களின் பொது இணக்கப்பாட்டுடன் " கூட்டு விவசாயப் பண்ணை முறையொன்றை" செயற்படுத்தல் வேண்டும்.

06. இச்சுற்றுநிருபத்தின் கீழ் நெல் தவிர்ந்த வேறு நிரந்தரமல்லாத பயிர்ச்செய்கையின் பொருட்டு அனுமதி வழங்கப்படும் "B" வகையிலான தரிசான வயற்காணிக்கு வாரப்பயிர்ச்செய்கையாளரொருவர் உள்ள சந்தர்ப்பத்தின் போது, 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 35 (1) பிரிவின் கீழ் வாரப்பயிர்ச்செய்கையாளரினால் நிழக்கிழாருக்குச் செலுத்தப்பட வேண்டிய குத்தகையை நிச்சயிக்கும் போது, 2019 மார்ச் மாதம் 12 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 2114/11 என்னும் இலக்கமுடைய சாதாரண வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணையின் II வது நிரலில் நிச்சயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள குத்தகைப் பணத்தை ஈடுபடுத்துதல் வேண்டும். அத்துடன், அவ்வர்த்தமானி அறிவித்தலில் உபஅட்டவணையின் Iவது நிரலில் குறிப்பிடப்படப்படாதுள்ள கமத்தொழில் பயிர்கள் தொடர்பாக நிழக்கிழாருக்கு வாரப்பயிர்ச்செய்கையாளரினால் செலுத்தப்பட வேண்டிய குத்தகையை, ஆணையாளர் நாயகத்தினால் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அடுத்து வரும் நாட்களில் வெளியிடப்படும் என்பதுடன், இதன் போது செலுத்தப்பட வேண்டிய குத்தகைப்பணம் தொடர்பாக நிழக்கிழார் மற்றும் இருப்பாட்சியாளருக்கிடையில் அந்நியோன்னிய இணக்கப்பாட்டுடன் செயற்படுத்துவதற்கு இச்சுற்றுநிருபம் தடையாகவிருக்காது.

07. 2016-2019 கமத்தொழில் காணி (வயல்) இடாப்பு மீள்த்திருத்த வேலைத்திட்டத்தின் போது, "B" வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, அத்துடன் இச்சுற்றுநிருபத்தின் நிபந்தனைகளை ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய, சகல தரிசு வயற்காணிகளின் பொருட்டான இணைப்பு - 01 அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அதிகாரம், 2000 ஆம் ஆண்டு 46 இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30(3) மற்றும் 34(1) பிரிவுகளின் பிரகாரம் உரிய காணி அமைந்துள்ள பிரதேசத்தின் கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தருக்கு இத்தால் கையளிக்கப்படுகின்றது.

08. இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகளுக்கு ஏற்புடையதாக வழங்கப்படும் இணைப்பு - 01 படிவத்தை, பிரதேசத்தின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் மூலம் உரிய காணியின் சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் உள்ள சந்தர்ப்பத்தில், நிழக்கிழார்கள் அல்லது இருப்பாட்சியாளரிடம் வழங்குவதற்கும் மற்றும் அனுமதிப்பத்திரத்தை குறித்த நபரினால் பெற்றுக்கொண்டதாக, எழுத்து மூல சாட்சியை, கமநல சேவைகள் நிலையத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு சகல கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்களும் செயற்படல் வேண்டும். ஏதேனுமொரு அதிகாரப்பிரிவில் வி.ஆ.உ.உ. உத்தியோகத்தரொருவர் சேவையாற்றாத சந்தர்ப்பத்தில், இணைப்பு - 01 அனுமதிப்பத்திரத்தைக் குறித்த நபரிடம் கையளிக்கும் பொறுப்பு, பிரதேசத்தின் அடையாளம் கண்டுள்ள கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் பிரதிநிதியொருவரிடம் கையளிப்பதற்கு கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள் செயற்படல் வேண்டும்.

09. அத்துடன், இவ் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெற்று 03 மாத காலத்தினுள்,உரிய காணி, இச்சுற்றுநிருபத்திற்கமைய, உற்பத்தித்திறன் மிக்கதாக ஈடுபடுத்துவதற்கு ஆயத்தம் செய்து, அதற்குரிய தகவல்களை இணைப்பு - 02 படிவத்தின் மூலம் உரிய காணியின் சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர் அல்லது இருப்பாட்சியாளர் உள்ள சந்தர்ப்பத்தின் போது, உரிய காணியின் உரிமையாளர் மற்றும் இருப்பாட்சியாளரினால் பிரதேசத்தின் வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர் மூலம் அல்லது வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர் கடமையில்லாத அதிகாரப்பிரதேசம் எனில், பிரதேசத்தின் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் ஊடாக காணி அமைந்துள்ள பிரதேசத்தின் கமநல சேவைகள் நிலையத்தின், கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தரிடம் கையளிப்பதற்கு செயற்படல் வேண்டும்.

10. அத்துடன், இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின் பேரில், "B" வகையிலான தரிசான வயற்காணியின் பொருட்டு வழங்கப்பட வேண்டிய சகல அனுமதிப்பத்திரங்களும், 15.02.2020 ஆந் திகதிக்கு முன்னர் உரிய நபர்களிடம் கையளித்து, அது பற்றி மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி பிரதி/உதவி ஆணையாளரிடம் அறிக்கையிடுவதற்கு சகல கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்களும் செயற்படல் வேண்டும் அத்துடன் இவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் காணிகளின் உற்பத்தித்திறனை மேலோங்கச் செய்யும் பொருட்டு, இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகளுக்கு ஏற்புடையதாக, அக்காணிகளில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் இணைப்பு - 2 படிவங்கள் கிடைக்கப் பெற்றதன் முன்னேற்றம் தொடர்பான தகவல்களை கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் முதலாவது வாரத்தினுள் அறிக்கையிடுவதற்கு கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள் செயற்படல் வேண்டும்.

11. அத்துடன், இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகள் செயற்படுத்தப்பட்டதன் முன்னேற்றத்தினை, இணைப்பு - 3 படிவத்திற்கமைய, ஒவ்வொரு மாதமும் முதலாவது வாரத்தினுள் கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்களினால் பிரதான காரியாலயத்திற்கு அறிக்கையிடல் வேண்டும்.

12. 01/2020 சுற்றுநிருபத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் உரித்து இல்லாத, 19/2018 சுற்றுநிருபத்தின் இன் 6(4) கீழ் வேண்டுகோள் விடுப்பதற்கு எதிர்பார்க்கும், எந்தவொரு தரிசு வயற்காணி நிழக்கிழார் அல்லது இருப்பாட்சியாளருக்கு19/2018 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் கீழான அனுமதிபத்திரத்தின் பொருட்டு வேண்டுகோள் விடுப்பதற்கு, எவரேனும் நபரொருவருக்கு உள்ள உரிமையின் பொருட்டு 01/2020 சுற்றுநிருபம் தடையாகாது எனவும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

13. அத்துடன், சுற்றுநிருபத்தின் அறிவுரைகளைச் செயற்படுத்தும் போது, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் விசேட அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றேன்.

அ. எந்தவொரு காரணத்திற்காகவும் தற்போது வெற்றிகரமான முறையில் நெற்செய்கையை மேற்கொள்ளும் அல்லது வெற்றிகரமாக நெற்செய்கையை மேற்கொள்ளக் கூடிய வயற்காணிகளில் வேறு பயிர்ச்செய்கையின் பொருட்டு அனுமதியை வழங்குவதற்கு இச்சுற்றுநிருபத்தை பயன்படுத்தலாகாது.

ஆ. 2017/2019 கமத்தொழில் காணி (வயல்) இடாப்பு மீள்திருத்த வேலைத்திட்டத்தின் போது, வகுதியின் கீழ் "B" வகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள தரிசான வயற்காணிகள் தவிர்ந்த வேறு வயற்காணிகளின் பொருட்டு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இச்சுற்றுநிருபத்தை ஈடுபடுத்திக் கொள்வது ஒழுக்கத்திற்கு எதிரான கடுமையான நடவடிக்கையாகக் கருதப்படும்.

14. மகவெலி விசேட அதிகாரப்பிரதேசங்களில் கமநல அபிவிருத்திச் சட்டத்தைச் செயற்படுத்துவது, இத்திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் மகவெலி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதால், இச்சுற்றுநிருப அறிவுரைகளை மகவெலி அதிகாரப் பிரதேசங்களின் பொருட்டு ஏற்புடையதாகாது.

15. இச்சுற்றுநிருப அறிவுரைகள் செயற்படுத்தப்பட்டது தொடக்கம், இலங்கையினுள் அமைந்துள்ள "B" வகையிலான தரிசான வயற்காணிகளை உற்பத்தித்திறன் மிக்கதாகாடுபடுத்துவதற்குச் ஊக்கத்துடன் செயற்பட்டு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், கமக்காரர்களின் ஒழுங்கமைப்பது, பிரிவுகளுக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்கள், கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி /உதவி ஆணையாளர்களின் பொறுப்பாகும்.

16. அத்துடன், இச்சுற்றுநிருபத்தின் அறிவுரைகள் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களும் ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், 2000 ஆம் ஆண்டு 46 இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30(3) மற்றும் 34(1) பிரிவுகளின் கீழ் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்குரிய அதிகாரங்கள், இத்திணைக்களத்தின் பல்வேறு நிலைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பொருட்டு கையளிக்கப்படினும், தேவையெனக் கருதப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களுக்கு இவ்அதிகாரங்களை நேரடியாகச் செயற்படுத்துவதற்கு இச்சுற்றுநிருபம் தடையாகவிருக்காது எனவும் மேலும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்: டபிளியூ.எம்.எம்.பீ. வீரசேகர,

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**பிரதிகள்:**

01. செயலாளர், மகவெலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு,
02. சகல மாகாணங்களினதும் பிரதான செயலாளர்கள்,
03. பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்,
04. பணிப்பாளர் நாயகம், நீர்ப்பாசனத் திணைக்களம்,
05. தலைவர், மத்திய சுற்றாடல் அதிகார சபை,
06. தலைவர், இலங்கை காணி அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம்,
07. சகல மாவட்ட செயலாளர்கள்,
08. சகல மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்கள்,
09. சகல மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்
10. பிரதான காரியாலயத்தின் சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள்.

இணைப்பு- 01

**அனுமதிப்பத்திரம்**

2016/2019 கமத்தொழில் காணி (வயல்) மீளத்திருத்த வேலைத்திட்டத்தின் கீழ் “B” வகுதியின் கீழ் அடையாளம் கண்டுள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள, தரிசான வயற்காணிகளில் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்டாதவாறு, 2011 ஆம் ஆண்டு46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட, 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30 (3) மற்றும் 34 (1) பிரிவுகளின் கீழ் நெல் தவிர்ந்த அரையாண்டுப் பயிர்கள் அல்லது நிரந்தரப் பயிர்கள் அல்லாத பலவருடப் பயிர்களைப் பயிரிடல் அல்லது கமத்தொழில் பயிர்ச்செய்கை அல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு அல்லது கமத்தொழிலுக்கு ஏற்புடையதான 01/2020 சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்துவதற்கு, அச்சுற்றுநிருபத்தினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின் பேரில் இத்தால் அனுமதியைவழங்குகின்றேன்.

1. காணியின் பெயர் :-

2.அமைவிடம் 2.1 மாவட்டம் :-
2.2 கமநலசேவைகள் அதிகாரப்பிரிவு :-
2.3 பிரதேசசெயலகப் பிரிவு :-
2.4கண்டம் :-
2.5 அடையாள இலக்கம் :-

3. நீர் மூலம் :- பெரியநீர்ப்பாசனம் ☐ மத்திய நீர்ப்பாசனம் ☐ சிறிய நீர்ப்பாசனம் ☐ மழைநீர் ☐

4. எல்லைகள் :- வ - ..........................................................................
கி - ..........................................................................
தெ - ..........................................................................
மே - ..........................................................................

5. காணியின் அளவு :- ஏக்.: ...... றூட்: ...... பேர்.: ......
6. உரிமை மற்றும் இருப்பாட்சி

6.1 சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளரின் பெயர்:
இருப்பாட்சியாளர் இருப்பின் பெயர்:
6.2 நிழக்கிழாரின் பெயர் :
6.3 வாரப்பயிர்ச்செய்கையாளர்/கூட்டுவாரப்பயிர்ச்செய்கையாளர /குத்தகைக்காரரின் பெயர்:

(சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர், நிழக்கிழார், இருப்பாட்சியாளர்கள் ஒருவரைவிட கூடுதலானவர்கள் இருப்பின், அச்சகலரதும் பெயர்களைக் குறிப்பிடவும்).

இவ் அனுமதிப்பத்திரம் கிடைக்கப் பெற்று 03 மாதங்களினுள் உரியகாணி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களின் பொருட்டு 01/2020 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் அறிவுரைகளின் பிரகாரம் ஈடுபடுத்துவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டு, அதுபற்றி இணைப்பு - 02படிவத்திற்கமைய பிரதேசத்தின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர் மூலம் கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தருக்கு முன்வைக்கப்படல் வேண்டும். விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர் கடமையில் இல்லாத அதிகாரப்பிரதேசங்களுக்கு அதற்குரிய சிபாரிசினை

உரியகமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் தலைவர் மற்றும் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

I. மேற்குறிப்பிடப்பட்டுள்ள காணியில் நெல் அல்லாத, அத்துடன் நிரந்தரமல்லாத வேறு பயிர்களைப் பயிரிடும் போது அல்லது வேறு கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு ஈடுபடுத்தும் போது சுற்றாடலுக்கு அழிவுகள் ஏற்படாதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

II. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் முறையான அனுமதியின்றி, மேற்படிக் காணிக்கு மண் நிரப்புதல், காணியிலிருந்து மண் அகற்றல் போன்றுகாணியில் நிரந்தரக் கட்டடத்தை அல்லது நிர்மாணங்களை மேற்கொள்ளலாகாது.

III. அண்மித்துள்ள காணிகளின் நீர்ப்பாசனங்கள் அல்லது நீர் வழங்கல்கள் அமைப்புக்களுக்குத் தடைகள் ஏற்படுத்தலாகாது என்பதுடன், நீர் மூலங்களுக்கும் அழிவுகள் ஏற்படும் எந்தவொரு செயற்பாடுகளையும் மேற்கொள்ளலாகாது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்படுமாயின், இவ் அனுமதிப்பத்திரத்தைச் இரத்துச் செய்வதற்கும் மற்றும் கமநல அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், தங்களுக்கு எதிராக சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஏற்படும் எனவும் மேலும் அறியத்தருகின்றேன்.

அத்துடன், நீண்டகாலமாக தரிசாகவிருந்த இவ்வயற்காணியை, இக்காணியிலிருந்து கிடைக்கப் பெறும் சுற்றாடல் நன்மைகளுக்குத் தடைகள் ஏற்படாதவாறு, உற்பத்தித்திறன் மிக்கதாக ஈடுபடுத்துவதற்கு, இவ்அனுமதிப்பத்திரத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற அனுமதியை தங்களினால் பயன்படுத்திக் கொள்வீர்கள் எனநம்புகின்றேன்.

......................................

கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்,

திகதி: ...................

**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்காக.**

**(உத்தியோகபூர்வ முத்திரை)**

பிரதி:

01. கமநல அபிவிருத்தி பிரதி/உதவிஆணையாளர்,

................................. மாவட்டம்.

இணைப்பு- 02

**"B" வகுதியின் தரிசான வயற்காணிகளில் நெல் தவிர்ந்த அரையாண்டுப் பயிர்கள் அல்லது நிரந்தரப் பயிர்கள் அல்லாத பலவருடப் பயிர்களைப் பயிரிடல் அல்லது பயிர்ச்செய்கை அல்லாத வேறு கமத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டுஅல்லது கமத்தொழிலுக்கு ஏற்புடையதான வேறு நடவடிக்கைகள் மேற்கொள்வதை அறிக்கையிடல்.**

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 30(3) மற்றும் 34 (1) பிரிவுகளின் கீழ், வெளியிடப்பட்டுள்ள, 01/2020 என்னும் இலக்கமுடைய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றுநிருப அறிவுரைகளில் படி எனக்கு/எங்களுக்கு உரிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியில், இதுவரையில் நெற்ச்செய்கை அல்லாத, அத்துடன் நிரந்தரப் பயிர்ச்செய்கையல்லாத கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கமத்தொழில் நடவடிக்கையின் பொருட்டு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இத்தால் அறியத் தருகின்றேன்.

காணியின் பெயர்:-

அமைவிடம் :- மாவட்டம் :-

கமநலசேவைகள் அதிகாரப்பிரிவு :-

கிராமஅலுவலர் பிரிவு :-

கண்டம் :-

அடையாள இலக்கம் :-

இத்தரிசு வயற்காணியை ஈடுபடுத்துவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ளதற்கான காரணம்

| காரணம் (பயிர் அல்லது காரணத்தைக் குறிப்பிடவும்) | | காணியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக்கர் | றூட் | பேர்ச் |
| I. | | | | |
| II. | | | | |
| III. | | | | |
| மொத்தம் | | | | |

.........................................
சொந்தக்காணிப்பயிர்ச்செய்கையாளர் (கையொப்பம்)
பெயர்:

அல்லது (வாரப்பயிர்ச்செய்கையாளர் அல்லது குத்தகைக்காரர் இருப்பின்)

.........................................
நிழக்கிழார் (கையொப்பம்)
பெயர்:
திகதி:

.....................................
வாரப்பயிர்ச்செய்கையாளர்/குத்தகைக்காரர்(கையொப்பம்)
பெயர்:
திகதி:

(விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரின் அல்லது கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் சிபாரிசு)

மேலேகுறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

...........................
**விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரின் கையொப்பம்**
**திகதி: .....................** உத்தியோகபூர்வ முத்திரை

அல்லது (வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர் கடமையில்லாத அதிகாரப் பிரதேசங்களின் பொருட்டு)

......................
தலைவர் (கையொப்பம்)
கமக்காரர்களின் ஒழுங்கமைப்பு
திகதி: .....................

......................
செயலாளர் (கையொப்பம்)
கமக்காரர்களின் ஒழுங்கமைப்பு

இணைப்பு - 03

01/2020 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதன் முன்னேற்றத்தினை அறிக்கையிடல்

(......... .......... .2020திகதிக்கு )

மாவட்டம்:- ..................................

| தொடர் இலக்கம் | கமநல சேவைகள் நிலையம் | "B" வகுதியின் கீழ் அடையாளம் கண்டுள்ள | | படிவம் - 01 இல் "அனுமதிப் பத்திரம்"வழங்கப்பட்டுள்ள | | படிவம் - 02 இல் கிடைக்கப் பெற்றுள்ள | | விசேடவிடயங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணித் துண்டங்களின் எண்ணிக்கை | ஏக்கர் அளவு | காணித் துண்டங்களின் எண்ணிக்கை | ஏக்கர் அளவு | காணித் துண்டங்களின் எண்ணிக்கை | ஏக்கர் அளவு | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

............................

கமநல அபிவிருத்தி பிரதி/உதவிஆணையாளர்,
..................................... மாவட்டம்.

திகதி: ..............................